**கவனிக்க.-** *07.10.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி III ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1728 - 2011 ඔක්තෝබර් මස 14 වැනි සිකුරාදා - 2011.10.14

*1728 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி II – சட்ட சம்பந்தமானது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | 124 |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 124 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


**கவனிக்க.-** (i) *மெத் சேவா மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2011, செத்தெம்பர் 16 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *கமநல அபிவிருத்தி (திருத்தம்) சட்டமூலம் 2011, செத்தெம்பர் 23 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2011, ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**லக்ஷ்மன் குணவர்தன,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# நொத்தாரிசுமார் பட்டியல்

## நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்

நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்கள் கீழ் குறிப்பிட்ட நியமனங்களைச் செய்துள்ளார் :

1. ஹொரணை, சோமாநந்த வீதி. இல. 49, என்னுமிடத்தில் வதியும் திரு. யோசான் வீரக்கொடி அவர்களை களுத்துறை நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

2. கொழும்பு-06, மெனிங் இடம், இல. 98-1/5, என்னுமிடத்தில் வதியும் செல்வி லாவண்யா பகீதரன் அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

3. கனன்கே, கனன்கே பஜார், தித்தெனிபொத கெதர, என்னுமிடத்தில் வதியும் செல்வி நிலந்தி சந்தமாலி பொரலெஸ்ச யாபா அவர்களை காலி நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

4. கலவானை (இரத்தினபுரி), ஹங்கரன்கல வீதி, என்னுமிடத்தில் வதியும் திரு. அகட கங்கானமலாகே தொன் சுமிந்த ஜயசிறி அவர்களை இரத்தினபுரி நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

5. கடவத்தை, மஹர, ஸ்ரீமாவோ பண்டாரநாயக்க மாவத்தை (1), இல. 187/3, என்னுமிடத்தில் வதியும் செல்வி நிபுனி ருவந்தி சமரசேகர அவர்களை கம்பஹா நீதாசன வலயத்தினில் ஆங்கில மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

6. பன்னிபிட்டி, எரவ்வல, இல. 350/2, என்னுமிடத்தில் வதியும் திரு. முதும்பிட்ட கெதர கசுன் பிரபாஸ்வர பிரேமரத்ன அவர்களை கொழும்பு நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

கொழும்பு 7,
09.09.2011.

10-319/1

## நொத்தாரிசுக் கட்டளைச் சட்டம்

நொத்தாரிசு கட்டளைச் சட்டத்தின் 04 ஆவது பிரிவின் கீழ் பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் அவர்கள் கீழ் குறிப்பிட்ட நியமனங்களைச் செய்துள்ளார் :

1. கம்பஹா, பெட்டியகொட, "ஸ்ரீதெரனவத்தை", இல. 19/15, என்னுமிடத்தில் பிரதான அலுவலகத்தையும் கம்பஹா, அஸ்கிரிய பண்டாரநாயக்க மாவத்தை, இல. 364 என்னுமிடத்தில் துணை அலுவலகத்தையும் கொண்டு நடாத்தும் திரு. லீனிய குமாரகே ரசிகா சாமிந்த பெரேரா அவர்களை கம்பஹா நீதாசன வலயத்தினில் சிங்கள மொழியில் கடமையாற்றும் நொத்தாரிசாக.

பீ. பி. அபேகோன்,
செயலாளர்,
பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள்
அமைச்சு.

கொழும்பு,
09.09.2011.

10-319/2

# நானாவித அறிவித்தல்கள்

## கொழும்பில் நிலைகொண்டுள்ளதான மேல் மாகாண உயர் நீதிமன்றத்தில் அதன் சிவில்/வணிக நியாயாதிக்கப் பிரயோகம்

வழக்கு இல.
H.C. (CIVIL) 40/2011/CO

கொழும்பு 05, இல. 46/1, பைப் வீதியில் அமைந்துள்ள பிரிண்ட்மெக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் விடயத்தில் ;
அத்துடன்
2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க, கம்பனிகள் சட்ட நியதிகளின்கீழ், நீதிமன்றத்தினால் கம்பனி ஒன்றினை மூடுவதற்கான விண்ணப்பமொன்றின் விடயத்தில் ;

பிரிண்ட்/மெக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்,
46/1, பைப் வீதி, கொழும்பு 05.
.................... மனுதாரர்

இத்தால் தரப்படும் அறிவித்தல் யாதெனில், கொழும்பு வர்த்தக உயர் நீதிமன்றத்தினால் மேலே பெயர் குறிப்பிடப்பட்ட கம்பனியை மூடுவதற்கான மனுவொன்று, மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மனுதாரர் ஆகிய பிரிண்ட் மெக்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட்டினால் சொல்லப்பட்ட நீதிமன்றத்தில் 2011, யூலை 28 ஆந் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டு, அம்மனு சொல்லப்பட்ட நீதிமன்றத்தின் முன்னிலையில் 2011, ஒற்றோபர் 21 ஆந் திகதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டுமென பணிக்கப்பட்டுள்ளது என்பதால், சொல்லப்பட்ட மனுவின்மீது கட்டளையொன்று பிறப்பிக்கப்படுதலை ஆதரிப்பதற்கு அல்லது எதிர்ப்பதற்கு விரும்புகின்றவரான அக்கம்பனியின் கடன்காரர் அல்லது உதவுநர் எவரேனும் விசாரணையின்போது நேரிலோ அல்லது அந்நோக்கத்துக்கென தமது வழக்கறிஞர் அல்லது பதிவு செய்யப்பட்ட அட்டோர்ணி மூலமாகவோ சமுகமளிக்கலாம். சொல்லப்பட்ட கம்பனியின் கடன்காரருக்கு அல்லது உதவுநருக்கு, அவர் அவ்வாறு தேவைப்படுத்துவாரெனின் மனுவின் பிரதியொன்று, கீழே கையொப்பமிட்டுள்ளவரால் அதற்காக விதித்துரைக்கப்பட்ட கட்டணம் கொடுப்பனவின் மீது வழங்கப்படும்:-

இஸாரா குணவர்தன,
சட்டத்தரணி,
514 சி, ஆர். ஏ. டீ மெல் மாவத்தை,
கொழும்பு 03,
தொலைபேசி : 0115-334466-7

**குறிப்பு.-** சொல்லப்பட்ட மனு விசாரணையின்போது சமுகமளிப்பதற்கு எண்ணுகிறவரான எவரேனுமாள், தமது எண்ணம்

பற்றி எழுத்திலான அறிவித்தல் ஒன்றை மேலே பெயர் குறிப்பிட்ட சட்டத்தரணி இஸாரா குணவர்தன அவர்கள் வசம் சேர்ப்பித்தல் வேண்டும். அல்லது அஞ்சல் மூலம் அனுப்புதல் வேண்டும். இந்த அறிவித்தல் நிறுவனத்தின் பெயரையும் முகவரியையும் குறிப்பிடுவதுடன், அவ்வாளினால் அல்லது நிறுவனத்தினால், அல்லது அவரது அல்லது அவர்களினது நிறுவனத்தினால் அல்லது அவர்களினது பதிவுசெய்யப்பட்ட அட்டோர்ணியினால் (எவரேனும் இருப்பின்) சேர்ப்பிக்கப்படல் வேண்டும். அல்லது அஞ்சலில் அனுப்புவதாயின், 2011, ஒற்றோபர் 20 ஆந் திகதி மாலை 6.00 மணிக்குப் பிந்தாமல் மேலே பெயர் குறிப்பிடப்பட்டவர் வசம் வந்து சேரும் வகையில் போதிய கால அவகாசத்துடன் அஞ்சல் செய்யப்படல் வேண்டும்.

இஸாரா குணவர்தன,
சட்டத்தரணி,

10-339

---

## இலங்கை தொழில்வாண்மை உள - சமூகப்பணி நிறுவனம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

அருந்திக பிரணாந்து, ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் 48 (1) ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''இலங்கை தொழில்வாண்மை உள-சமூகப்பணி நிறுவனம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த நிறுவனம் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. தரம் வாய்ந்த உள-சமூகப்பணித் துறையில் நிலைமைகளை மேம்படுத்தல் மற்றும் உள-சமூகப்பணித்துறையில் ஈடுபட்டுள்ள உறுப்பினர்களின் விழுமியம், கௌரவம், உரிமைகள், ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு ;
2. உள சமூகப்பணித்துறையில் ஈடுபட்டுள்ளவர்களின் அறிவு, திறமை, மற்றும் மனப்பாங்கு என்பவற்றை மேம்படுத்துவதற்கு அவசியமான உள சமூகப்பணிக் கல்வி, பயிற்சி, ஆராய்ச்சி மற்றும் வெளியீட்டு துறைகளில் புதிய மூலோபாயங்களை அறிமுகம் செய்தலும் அதன் மூலம் சமூகத்தை அபிவிருத்தி செய்தலும் வலுவூட்டலும் ;
3. சமூக அபிவிருத்தி தொடர்பாக கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்களை விருத்தி செய்தலும் கொண்டு நடாத்துதலும் அவற்றோடு சம்பந்தப்பட்ட புதிய கொள்கைகளை அறிமுகம் செய்தலும் ;

பிறவும்.

அருந்திக பிரனாந்து,
பாராளுமன்ற உறுப்பினர்,
புத்தளம் மாவட்டம்.

10-345